**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**வழக்கு எண் :IA No: 5/2022 in OS No:165/2019 தேதி:11.11.2024**

**எ.ம.சா. 1 – குணசேகரபாண்டியன்**

**குறுக்கு விசாரணை :** ( மனுதாரர் தரப்பில்)

இவ்வழக்கின் வாதி தேவமுகுந்தன் அமெரிக்காவில் வசிக்கிறார் என்றால் சரிதான். அவர் ஆரம்பத்தில் அவரின் அப்பாவை பவர் ஏஜெண்டாக நியமித்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அவர் அப்பா சுப்புராஜ் இறந்த பிறகு அவரின் மாமனார் காசிராஜன் என்பவரை பவர் ஏஜெண்டாக நியமித்து ஒரு பவர் பத்திரம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். பவர் பத்திரத்தை அங்கிகரித்து வாதி வழக்கு நடத்த எனக்கு என்ன ஆட்சேபணை உள்ளது என்றால் வழக்கில் காண்பிக்க சொத்தும் பவர் பத்திரத்தில் உள்ள சொத்தும் முரண்பாடோடு உள்ளது. மேலும் விற்பனைக்காக கொடுக்கப்பட்ட பவர் பத்திரத்தை வழக்கு தாக்கல் செய்ய அனுமதி கேட்டு போட்டுள்ளார்கள். OS No:118/2014 வழக்கிலேயே வாதி அவர் அப்பா பெயரில் உள்ள பவர் பத்திரத்தை தாக்கல் செய்திருந்தார் என்றால் சரியல்ல. 12.08.2014 அன்று வாதி பவர் பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த ஆவணம் என்னிடம் கொடுக்கப்படவில்லை. அதன் பின்பு வாதி அவரது மாமனார் பெயரில் எழுதி கொடுத்த பவர் பத்திரத்தை 2021 ஆண்டிலேயே நீதிமன்றத்தில் தாக்கல்செய்துள்ளார் என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததை நீதிமன்றம் நிராகரித்துவிட்டது. அவ்வாறு நிராகரிக்கப்பட்டதற்கான மனு எண் எனக்கு தெரியாது. இவ்வழக்கில் வாதி ஏ, பி, சி என்று மூன்று பட்டியல் சொத்துக்கள் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். ஏ பட்டியல் சொத்தை தான் வாதி தன் மாமனாருக்கு எழுதி கொடுத்த பவர் பத்திரத்தில் ம.சா.ஆ 1ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஏ பட்டியல் மொத்த சொத்தில் கீழ்புறம் உள்ள பாதி பாகத்தை தான் நான் 2ம் பிரதிவாதியிடம் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற கீழ்புற பாதி தான் இவ்வழக்கின் சி பட்டியல் சொத்து என்றால் சரிதான். மீதியுள்ள மேல்புற பாதி பகுதி தான் இவ்வழக்கின் பி பட்டியல் சொத்து என்றால் சரிதான். பி பட்டியல் சொத்து தனக்கு பாத்தியப்பட்டது என்று வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

நானும், வாதியும் ஒப்புக்கொண்டு வருவாய் அலுவலகத்தில் மனு கொடுத்து டிபிடி எண்.2572/12/20– நாள் 06.12.2017 தேதியிட்ட உத்தரவில் மேல்புறம் பாதி வாதிக்கும், கீழ்புறம் எனக்கும் என உட்பிரிவு செய்து கொண்டோம் என்றால் சரியல்ல. அந்த உட்பிரிவின்படி வாதிக்கு மேல்புற பாதி சொத்தின் சர்வே எண்.7/20 என ஏற்பட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு ஒதுக்கப்பட்டு பட்டா எண்.3995 க்கு கொடுக்கப்பட்டது என்றால் சொத்திற்கு முரண்பாடாக பட்டா கொடுக்கப்பட்டுள்ளது. எனக்கு பாத்தியப்பட்ட கீழ்புற பாதியை சர்வே எண்.7/30 என்று உட்பிரிவு செய்யப்பட்டது என்றாலும் அதற்கான பட்டா எண்.4163 என்றால் சரியல்ல. மேற்படி உட்பிரிவிற்கும் எனக்கும் சம்மந்தம் இல்லை. மேல்புறம் சரிபாதி வாதிக்கும், கீழ்புறம் சரிபாதி எனக்கும் என்பதை ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் ஒப்புக்கொள்கிறேன். வாதிக்கு பாத்தியமான வழக்கு சொத்து விவரம் பவர் பத்திரத்தில் தவறாக உள்ளது தவிர வேறு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின் படி பவர் பத்திரம் இல்லை என்று மேற்படி வழிகாட்டுதல்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. உச்ச நீதிமன்ற தீர்ப்பை கொடுத்துள்ளார். இந்த மனுவை அனுமதிப்பதற்கு எந்தவித அடிப்படையும் இல்லாமல் நான் ஆட்சேபணை செய்து காலதாமதம் செய்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.